பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40 கதிர் : 81 | சனிக்கிழமை 15 பெப்ரவரி 2025 | மாசி 03 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056

## உத்தரதேவியின் பயணம் தாமதம்

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பிக்கப்படவிருந்த உத்தர தேவி ரயில்சேவை தற் ☞ 10

'பட்ஜெட்' ஒதுக்கீட்டில்

## எம்.பி.க்கள் ஊடாக 56 மில்லியன் ரூபா!

*நீண்ட விவாதங்களின் பின்னர் முடிவு*

யாழ்ப்பாணம், பெப். 15
2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக 56 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்து அபிவி ☞ 11

வரவு - செலவுத் திட்டத்தில்

# யாழ்ப்பாணத்துக்கு ரூபா 500 மில்லியன்!

ஜனாதிபதி அநுர விசேட ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 15
2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில், யாழ்ப்பாணத்துக்காக 500 மில்லியன் ரூபாவை (விசேட ஒதுக்கீடு) ஒதுக்கீடு செய்வதற்கு ஜனாதிபதி அநுர உத்தேசித்துள்ளார். இது தொடர்பான முன்மொழிவுகளும் கோரப்பட்டுள்ளன என்று அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார். ☞ 11

பத்து அம்சக் கோரிக்கைகளுடன்

## முன்னாள் போராளி உணவுத் தவிர்ப்பு!

முல்லைத்தீவு, பெப். 15
முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவர் பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீதி கிடைக்கும் வரை அல்லது உயிர்துறக்கும் வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
ஒரு காலை இழந்த முன்னாள் போராளியான ☞ 11

## கஜேந்திரகுமாருக்கு நீதிமன்றம் பிணை!

யாழ்ப்பாணம், பெப். 15
'தையிட்டி திஸ்ஸ விகாரையை இடிக்க வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் அழைப்புவிடுத்தார்' என்று பலாலிப் பொலிஸாரால் சோடிக்கப்பட்ட வழக்கில் அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கி உத்தரவிட்டது.
மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம் வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. கஜேந்திரகுமார் ☞ 11



## தபால் ரயில்சேவைகள் இனி மொறட்டுவ வரை!

யாழ்ப்பாணம், பெப். 15
காங்கேசன்துறைக்கும் கொழும்புக்கும் இடையில் இயக்கப்பட்டுவந்த தபால் ரயில்சேவை, தற்போது மொறட்டுவ வரை சேவை விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண ரயில் ☞ 11

## மன்னார் காற்றாலைத் திட்டம்: சீனாவுக்கு வழங்கப்படாது!

*அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு!*

☞ 10

## நாடாளுமன்றத்திலும்கூட தவறான மொழிபெயர்ப்பு

*சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு*

கொழும்பு, பெப். 15
உள்ளூராட்சித் தேர்தல் சட்டவரைவு தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் நேற்றுச் சபைக்கு அறிவிக்கும்போது, அவரின் உரை தமிழ்மொழியில் முறையாக மொழி பெயர்க்கப்படவில்லை என்று நாடாளு ☞ 11

உள்ளூராட்சித் தேர்தல்

## விசேட சட்டவரைவுக்கு அறுதிப்பெரும்பான்மை

**உயர்நீதிமன்றம் கண்டிப்பான உத்தரவு**

கொழும்பு, பெப்ரவரி 15
உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்கள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள், நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்று உயர் ☞ 11

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 15
திடீரென மயங்கி விழுந்த குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அச்சுவேலியில் நேற்று ☞ 10



"ஆருக்கு குடுக்க மாட்டினம் எண்டுகினமோ அவைக்குத்தான் குடுப்பினம் கண்டியளோ"

## பட்டதாரிகளின் போராட்டத்தை கண்காணிக்கிறது புலனாய்வுத்துறை!

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ்ப்பாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளால் மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்கு புலனாய்வுப் பிரிவினரின் அச்சுறுத்தல் இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகள் மேலும் தெரிவித்ததாவது:
வேலைகளைக் கோரி நாங்கள் தொடர்ச்சியா ☞ 10

## பொதிசெய்யப்பட்ட மீன்: இறக்குமதிக்குத் தடை!

*அரசாங்கம் வாக்குறுதி*

கொழும்பு, பெப். 15
வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குள் பொதிசெய்யப்பட்ட மீன்களை இறக்குமதி செய்வது நிறுத்தப்படும் என்று அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளதாக, உள்ளூர் மீன் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். ☞ 10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | | ஹந்தஹன ராசி சுப பலன் | | NLB ஜய | | மெகா பவர் | | மஹஜன சம்பத | | தன நிதானய | | அத சம்பத | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | 14.02.2025 | திகதி | 14.02.2025 | திகதி | 14.02.2025 | திகதி | 14.02.2025 | திகதி | 14.02.2025 | திகதி | 14.02.2025 | திகதி | 14.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3989 | சீட்டிழுப்பு இலக்கம் | 1056 | சீட்டிழுப்பு இலக்கம் | 0015 | சீட்டிழுப்பு இலக்கம் | 2095 | சீட்டிழுப்பு இலக்கம் | 5747 | சீட்டிழுப்பு இலக்கம் | 1777 | சீட்டிழுப்பு இலக்கம் | 322 |
| ஆங்கில எழுத்து | D | வெற்றி இலக்கினம் | கன்னி | ஆங்கில எழுத்து | V | ஆங்கில எழுத்து | U | ஆங்கில எழுத்து | F | ஆங்கில எழுத்து | I | ஆங்கில எழுத்து | F |
| | | | | | | சுப்பர் இலக்கம் | 23 | | | | | | |
| வெற்றி இலக்கங்கள் | 08 18 39 74 | வெற்றி இலக்கங்கள் | 01 09 54 60 | வெற்றி இலக்கங்கள் | 1 8 3 9 | வெற்றி இலக்கங்கள் | 30 71 77 78 | வெற்றி இலக்கங்கள் | 0 4 9 3 9 1 | வெற்றி இலக்கங்கள் | 30 49 61 77 | வெற்றி இலக்கங்கள் | 9 3 9 1 |
| விசேட எழுத்து | D | | | | | | | | | விசேட எழுத்து | I | | |

# அனைவருக்கும் சமமான வரி வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும்

## அமெரிக்கா தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.15**

**வெளிப்படைத்தன்மையுடன் அனைவருக்கும் சமமான வரிக் கொள்கை ஒன்றை மேற்கொள்வது வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு மிகவும் பரந்துபட்ட பின்புலத்தை உருவாக்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

அமைச்சர் அனில் ஜயந்த பெர்ணாந்துவை கடந்த புதன்கிழமை அமெரிக்கத் தூதுக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர். அந்தக் கலந்துரையாடலிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மூலோபாய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு மனிதவளத்தை வலுப்படுத்த தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது. வரிகள் மற்றும் முதலீடுகள் தொடர்பாக எடுக்கப்படும் கொள்கைகள் அனைவருக்கும் ஒரேமாதிரியாக இருக்கும் வகையில் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தயாரிப்பது முக்கியமாகும். இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் திறன் அமெரிக்க வர்த்தகர்களுக்கு உள்ளது. அது இலங்கையின் அபிவிருத்தியின் முன்னுரிமை ஒழுங்கின்படி செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 14.02.2025 | வெள்ளிக்கிழமை | 0455 | R | 7 6 0 9 8 6 |

## Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 14.02.2025 | வெள்ளிக்கிழமை | 2721 | L | 12 57 61 66 |

## சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 14.02.2025 | வெள்ளிக்கிழமை | B | 45 49 50 71 | 4882 |

## லக்ன ராசி

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 14.02.2025 | வெள்ளிக்கிழமை | விருச்சிகம் | 06 09 17 27 | 4433 |

## KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 14.02.2025 | வெள்ளிக்கிழமை | B | 37 | 04 23 27 53 | 1897 |

## அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 14.02.2025 | வெள்ளிக்கிழமை | N | 09 11 17 25 | 2547 |

## SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 14.02.2025 | வெள்ளிக்கிழமை | 0622 | 03 11 18 |

# இலங்கைக்கான திட்டங்களை இரத்துச்செய்தது அமெரிக்கா!

கொழும்பு, பெப்.15

அமெரிக்க கோடீஸ்வர தொழிலதிபர் எலோன் மஸ்க்கின் அரசாங்க செயல்திறன் துறை, இலங்கையில் ஒரு காலநிலை தகவலமைப்புத் திட்டம் உட்பட, வீணானது என்று கருதப்பட்ட பல யு.எஸ்.எய்ட். நிதியளிப்புத் திட்டங்களை நிறுத்தியுள்ளது.

எக்ஸ் பதிவில் வெளியிடப்பட்ட தகவல்படி, இரத்துச் செய்யப்பட்ட 199 திட்டங்களில் இலங்கைக்கான இரண்டு திட்டங்களையும் அந்தத் துறை பெயரிட்டுள்ளது. இலங்கை காலநிலை மாற்றத் தணிப்பு தகவமைப்பு மற்றும் வனசேவைக்கான மீள்தன்மை ஒருங்கிணைப்பாளர் சேவைகள் என்பனவே அவையாகும்.

இலங்கைக்கான இரண்டு திட்டங்கள் உட்பட்ட 199 திட்டங்களை இரத்துச்செய்ததன் மூலம் 250 மில்லியன் டொலர் மீதப்படுத்தப்பட்டுள்ளது என்று மஸ்க் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் திரட்டப்படும்

## *ராஜித சேனாரத்ன தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.15

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் சகல சக்திகளையும் ஒன்றுதிரட்டி செயற்படுவோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டுள்ளார். (எ-இ)

# அதானி குழும வெளியேற்றம் இலங்கைக்குப் பெரும் பாதிப்பு

## ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு. பெப்.15

இந்தியாவின் அதானி குழுமம் இலங்கையில் மேற்கொள்ளவிருந்த காற்றாலை மின்திட்டத்திலிருந்து வெளியேறியிருப்பது அந்நிய முதலீடுகளைப் பாதிப்பதுடன், டொலர் இருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதானி குழுமத்தின் வெளியேற்றம் அந்நிய முதலீட்டாளர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதானி குழுமத்தின் இந்தத் திட்டம் ஒரு பில்லியன் டொலருடனான முதலீட்டுத் திட்டம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறைந்ததொகையுடனான கேள்விப்பத்திரம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும், வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவேண்டும் என்றும் பேசுகின்றார். ஆனால் அதானி குழுமத்தின் வெளியேற்றம் காரணமாக இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

அதானி நிறுவனம் முன்னோடி கட்டுமானப் பணிகளுக்காக 5 மில்லியன் டொலரைச் செலவிட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் குழுவுடன் 14 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டபோதும் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படாமையே அதானி குழுமத்தின் வெளியேற்றத்துக்கான காரணம் என்று கூறப்படுகின்றது. இந்த வெளியேற்றம் தங்களுக்குக் கிடைத்த வெற்றி என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். ஆனால் புதுப்பிக்கத்தக்க மீள்சக்தித் திட்டத்துக்கு அதானிக்குப் பதிலாக யார் முதலீடு செய்யப்போகின்றார்கள் என்ற கேள்வி எழுந்திருக்கின்றது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## உள்ளூராட்சித் தேர்தலில்

# நாடளாவிய ரீதியில் களமிறங்கும் ஐ.ம.ச.

கொழும்பு, பெப். 15

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சிசபைகளுக்கும் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்தவக்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது. சில இடங்களில் கூட்டணியானது ஐக்கிய மக்கள் கூட்டணியாக தொலைபேசிச் சின்னத்திலேயே களமிறங்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கு இடையிலான ஒன்றிணைவு இன்னும் சாத்தியப்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனினும், கொழும்பு, கண்டி மற்றும் பதுளை ஆகிய இடங்களில் உள்ள சபைகளைக் கைப்பற்றுவதற்கு இருதரப்பும் இணைந்து செல்வதற்குரிய சாத்தியம் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்த மின்வெட்டு இனியில்லை

## எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.15**

**நாடளாவிய ரீதியில் நாளாந்த மின்வெட்டு இனி நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை, தேசிய மின்சார கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்திலுள்ள மூன்று மின்பிறப்பாக்கிகளும் செயலிழந்தன.

இதன் விளைவாக, மின்சாரத் தேவையை நிர்வகிக்க முடியாததால் நாளாந்தம் ஒன்றரை மணிநேர மின்வெட்டை நடைமுறைப்படுத்த இலங்கை மின்சாரசபை நடவடிக்கை எடுத்தது. இந்த நிலையில் நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்தில் உள்ள மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களை மீட்டெடுத்து, தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க மின் பொறியாளர்கள் மற்றும் ஊழியர்கள் விரைவாக செயற்பட்டு வருகின்றனர் என்றும் அதற்கமைய இனி மின்தடை நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)


## சிறுவர்களிடையே புற்றுநோய் பாதிப்பு

கொழும்பு, பெப். 15

இரத்த,மூளை.கண்,எலும்புப் புற்று நோய்கள் சிறுவர்கள் மத்தியில் அதிகரித்து வருவதாக மகரகம புற்றுநோய் மருத்துவமனை பணிப்பாளர் மகேந்திர சோமதிலக தெரிவித்துள்ளார்.

குருதியில் வெண்குருதிக் கலங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டால் அத்துடன் காய்ச்சல் ஆர்த்ரைடிஸ் என்பன காணப்பட்டால் அதுபுற்றுநோய்க்கான அறிகுறியாக இருக்கலாம்.

நான்கு வயது சிறுவர்களிடையே கூட கண் புற்றுநோய் காணப்படுகிறது. கண்களில் வெள்ளைநிறம் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-6)



தெல்லிப்பழை மருத்துவமனையில்

## புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கட்டடத்துக்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டுள்ளது.

வன்னி கோப் எனும் நிறுவனத்தின் 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கட்டடத்துக்கான அடிக்கல்லை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நட்டுவைத்தார்.

இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் அதனைப்பயன்படுத்தி எமது மாகாணத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்துகொள்ளவேண்டும்.

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கான தேவைகள் இன்னமும் நிறைய இருக்கின்றன. அவையும் விரைவில் பூர்த்திசெய்யப்படவேண்டும் - என்றார். (ச-125,20)

## முதலீட்டு வலயத்தில் தீவிபத்து

கொழும்பு, பெப். 15

களுத்துறை - ஹொரணை, பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தீ விபத்து நேற்றுமுன்தினம் ஏற்பட்டுள்ளது. கருவாப்பட்டை சார்ந்த வாச னைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையிலேயே இந்தத்தீவிபத்துநிகழ்ந்துள்ளது. ஹொரணை தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (ச-இ)



## வேலையில்லாப் பட்டதாரிகள் யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 15

வேலைவாய்ப்பை வழங்குமாறு கோரி வேலையில்லாப் பட்டதாரிகள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்கலந்துகொண்ட நிலையிலேயே வேலையில்லா பட்டாரிகள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-27)




"உலகத் தொலைக்காட்சி வரலாற்றிலேயே முதன் முறையாக..." எண்டு ரீவியில சில சினிமாப் படங்கள் போடுறதுக்கு முதல் விளம்பரம் செய்யிறதை அடிக்கடி கேட்டிருப்பியள். இப்ப "தமிழரின் அரசியல் வரலாற்றிலேயே முதன்முறையாக.." எண்டு ஒரு விசயம் நடந்திருக்குது. வேற ஒண்டுமில்லை, தையிட்டி விகாரைக்கு எதிராக ஈ.பி.டி.பி. யும் போராட வந்ததுதான் அந்த விசயம். இதுவரைக்கும் இணக்க அரசியலைத் தவிர வேற ஒண்டுமே தெரியாத கட்சியாகத்தான் ஈ.பி.டி.பி. இருந்தது. நல்லாட்சிக்காலத்தில எதிர்க்கட்சியா இருந்தாலும், அப்ப கூட அரசாங்கத்துக்கோ ஆமிக்கோ எதிரா ஈ.பி.டி.பி.க்காரர் ஒரு துரும்பைக் கூட அசைக்கேலை. சனத்துக்காகவும் போராட வரேலை. அதோட இப்பிடிப் போராடுற ஆக்களைக்கூட - போராடி என்னத்தைக் காணப் போறியள்? ஏற்கனவே புலியளும் போராடினவை. என்ன நடந்தது? நாட்டை நாசமாக்கினதுதான் மிச்சம்" எண்டு நக்கலடிச்சவை. இப்ப என்னெண்டால் ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறுமெண்ட கணக்கா, ஈ.பி.டி.பிக்காரரும் போராட்ட அலைக்குள்ள வந்து சேர்ந்திருக்கினம்.

ஒருவகையில அவையளும் போராட வந்தது நல்லதுதான். இவ்வளவு நாளும் இணக்க அரசியலைப் பேசினவைக்கே தையிட்டி விகாரை பிரச்சினையா இருக்கெண்டா, அது எவ்வளவு தூரம் இன நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு எண்டு சிங்கள ஆக்களும் யோசிப்பினம். ஏனெண்டால், சிங்கள ஆக்களைப் பொறுத்தவரைக்கும் ஈ.பி.டி.பி., தான் நியாயமா நடக்கிற கட்சி, மற்றத் தமிழ்க் கட்சிகளெல்லாம் புலியளின்ர பினாமியள் எண்டுதான் நினைக்கிறவை. இப்ப அவை நியாயமா நடக்கிற கட்சி எண்டு நினைக்கிற ஈ.பி,டி.பியும் தையிட்டி விகாரைக்கு எதிராப் போராடின விசயம் எங்கட ஆக்களுக்கு மட்டுமில்லை சிங்கள ஆக்களுக்கும் அதிர்ச்சியைக் குடுத்திருக்கு. எல்லாத் தமிழ்க்கட்சியளும் முதல்முறையா ஒரு விசயத்துக்காகப் போராடுறது எண்டால் அது தையிட்டி மட்டும் தான்.

இதைவிட இன்னொண்டையும் சொல்லோணும். வழக்கமா முன்னணிக்காரர் போராட்டங்கள் எண்டாலே உணர்ச்சிக்குழம்பா, அக்கினிப் பிழம்பாத்தான் நிக்கிறவை. அதால ஈ.பி.டி.பி.காரரும் தையிட்டிப் போராட்டத்தில கலந்துகொள்ளவெண்டு வரேக்க, முந்தின கோபத்தில ஈ.பி.டி.பி. காரரை அடிச்சுக் கலைக்கப் போயினமோ எண்ட பயம் சனத்துக்கு இருந்தது. ஆனால் இந்த இடத்திலதான் படுநிதானமா நடந்தவை. அவை ஒரு பக்கமா நிண்டு போராடுறதைத் தடுக்கவுமில்லை ஆனால் அவையைத் தங்களோட சேர்க்கவுமில்லை. போராட்டம் நடக்கிற இடத்தில இப்பிடி தாங்கள் மட்டும் போராடினம் எண்டு பேரெடுக்காமல், சனத்தின்ர நன்மையை யோசிச்சு அந்த இடத்தில நடந்த மாதிரி எல்லா இடத்திலையும் இனி முன்னணி நடந்தால், உடைஞ்சு போன வீட்டை விட்டிட்டு சனங்கள் சைக்கிளில தொத்திக்கொண்டு போடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சு முடியும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக்காரியங்கள் அனுகூலமாக முடியும். பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் சில பிரச் சினைகளும் அலுவலகத்தில் ஏற்படக்கூடும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது. போட்டிகளைச் சமாளிக்க வேண்டி வரும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குத் தாய்மாமன் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தை வழி உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.


**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்கள் உதவி செய்வார்கள்.. வியாபாரத்தில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் இழுபறி நிலை மாறும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மன உறுதியுடன் முடிவெடுத்துச் செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

# நான்காவது ஆண்டாகவும் "ப்ரீடம் ரைட்"






உள்ளூரில் தயாராகும் முதற்தர உற்சாக பானமான RIDE, இலங்கையின் 77வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில், பைக்கர்ஹோலிக்ஸ் (Bikerhoilcs) நிறுவனத்துடன் இணைந்து, 4 ஆவது ஆண்டாகவும் இடம்பெற்ற "ப்ரீடம் ரைட்"இல் (Freedom RIDE) பங்கு கொண்டுள்ளது.

இந்த நிகழ்வு, இலங்கையின் 77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் சுதந்திரம் மற்றும் ஒற்றுமையின் உணர்வைக் கொண்டாடும் முகமாக RIDE, 2025 பெப்ரவரி 4. அன்று நடைபெற்ற 4வது வருடாந்த "ப்ரீடம் ரைட்" க்கு அனுசரணை வழங்க பைக்கர்ஹோலிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்துகொண்டது.

காகில்ஸ் புட் சிட்டி டெபனாமாவில் எழில்மிகு காட்சிகள் நிறைந்த பாதையில் தொடங்கிய இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட ஓட்டிகள், அதி திறன் கொண்ட மோட்டார் சைக்கிள் அணிவகுப்பில் ஈடுபட்டு, சிறிது நேரம் வர்த்தகநாம நிகழ்வுக்காக காகில்ஸ் ஃபுட் சிட்டி டோரிங்டனில் தரித்து நின்றபின், கொழும்பின் காலி முகத்திடலை சென்றடைந்தனர். மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் பயணத்தைப் பிரதிபலித்ததோடு இலங்கையின் கலாசார பாரம்பரியத்தைக் கொண்டாடவும் காலிமுகத்திடலில் ஒன்று கூடினர். "ப்ரீடம் ரைட்", ஏராளமான பங்கேற்பாளர்களை வெற்றிகரமாக ஈர்த்தது, இது நாட்டின் சுதந்திரத்தை மதிக்கவும் சமூக ஈடுபாட்டை ஊக்குவிக்கவும் ஒரு தளத்தை வழங்கியது.

பல ஆண்டுகளாக சந்தையில் முன்னிலை வகிக்கும் உற்சாக பானமான RIDE மலிவு விலையில் சர்வதேச தரத்திலான உற்சாக பான அனுபவத்தை வழங்கியதன் மூலம் இலங்கையின் சந்தையினை மறுவரையறை செய்துள்ளது. உயர்தர தயாரிப்புகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட RIDE, உலகளாவிய உற்சாக பான வர்த்தகநாமங்களுக்கு இணையாக இருப்பதுடன் இலங்கையில் பயணம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான அதன் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக "ப்ரீடம் ரைட்" இல் பங்கு கொண்டுள்ளது. இலங்கைக்கு மோட்டார் சைக்கிள் பயணத்தை விரும்பும் சர்வதேச பயண வலைப்பதிவாளர்கள் மற்றும் பிற சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும், எதிர்கால நிகழ்வுகளில் அவர்களை இணைத்துக்கொள்ளவும் ஏற்பாட்டாளர்களாக நாம் எதிர்பார்க்கிறோம்.

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ் . பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக விஞ்ஞானபீட மாணவன் ரி.லகிர்தர், செயலாளராக முகாமைத்துவபீட மாணவன் ரி. அனோஜன், இளம் பொருளாளராக கலைப்பீடத்தில் இருந்து எஸ்.மிதுர்சன் , உபதலைவராக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பி.பவதாரகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-22,125)

## ஊடகவியலாளர் பாரதியின் நினைவு வணக்கக் கூட்டம்

கொழும்பு, பெப்.15

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மூத்த பத்திரிகை ஆசிரியரும், மூத்த ஊடகவியலாளருமான இராஜநாயகம் பாரதியின் நினைவு வணக்கக்கூட்டம் கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி மாலை 5.30மணியளவில் இடம்பெறவுள்ளது. (ச-41-66)

## மதிப்பளிப்பும் பொங்கல் விழாவும்

யாழ்ப்பாணம், பெப். 15

'ஏர் நலம்' தொண்டமைப்பினரின் ஏற்பாட்டில், மூத்த உழைப்பாளர் மதிப்பளிப்பும், பொங்கல் விழாவும் அமைப்பின் இணைப்பாளர் கவிஞர் பெனில் தலைமையில் அடம்பன் மாளிகைத் திடல் பிள்ளையார் ஆலய முன்றலில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தி னராக மாந்தை மேற்குப் பிரதேச செயலர் டெ.க. அரவிந்தராஜ், கௌரவ விருந்தினர்களாக திருக்கேதீஸ்வர தேவஸ்தானக் குரு சிவஸ்ரீ கருணானந்தக்குருக்கள், அடம்பன் பங்குத்தந்தை மரியதாசன் அடிகளார், அடம்பன் பள்ளிவாசல் பிரதம இமாம் அப்துள்காதர் உமைர், அடம்பன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். பிரியந்தன், அடம்பன் கிராம உத்தியோகத்தர் லினற் அருள்மதி சந்தியோகு, மாளிகைத்திடல் பிள்ளையார் ஆலய நிர்வாக உரிமையாளர் ம.சூரியபுத்திரன், மாளிகைத்திடல் கமக்கார அமைப்பின் தலைவர் மு. கோவிந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

சில நேரங்களில் நீங்கள் வெற்றிபெறுகிறீர்கள்,
சில நேரங்களில் நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்.

– ஃபில் மெக்ரா

# தெரிந்த சாத்தான்களும் தெரியாத தேவதையும்!

பிரிக்கப்படாத இலங்கைக்குள் வாழ்வதற்குத் தமிழ் மக்கள் தயார் என்று ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கியஸ்தரான ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையில் இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு தேசியக் கட்சிமீது தமிழ் மக்கள் அன்பைச் செலுத்தி வருகின்றனர். ஜனாதிபதியின் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தின்போதும் அது எதிரொலித்துள்ளது என்றும் ரில்வின் சில்வா சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், பிரிக்கப்படாத இலங்கைக்குள் வாழ்வதற்குத் தமிழர்கள் தயார்தான். இதை தமிழர்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் ஒன்றுக்குப் பலதடவைகள் தெரிவித்துள்ளனர். எனவே, 'பிரிக்கப்படாத இலங்கை' என்ற சித்தாந்தம், தேசிய மக்கள் சக்தியின் வெற்றியுடன் தமிழர்களிடத்தில் உதித்த ஒன்றல்ல. அவ்வாறான கற்பிதங்களை ரில்வின் சில்வா கொண்டிருப்பாரானால், அது அவருடைய அரசியல் முதிர்ச்சியற்ற நிலை என்பதாகவே அமையும்.


இப்போது தமிழர்கள் கேட்பதெல்லாம், பிரிக்கப்படாத இலங்கைக்குள் வழங்கப்படும் 'சமஷ்டியே'. சமஷ்டியை அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தித்தாருங்கள் என்பதுதான் தமிழர் தாயகத்தின் ஒற்றைக் கோரிக்கை. புதிய அரசமைப்பை உருவாக்கப்போகின்றோம் என்று புறப்பட்டிருக்கும் தேசிய மக்கள் சக்தியினர், இந்த விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டில் உள்ளனர் என்ற பதில்தான் தற்போது தேவைப்படுகின்றது. எனவே, பொத்தம்பொதுவான வாய்ச்சவடால்களையும், அறிக்கைகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்காமல், தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் அரசாங்கத்தின் தீர்க்கமான எண்ணம் என்ன? என்பதற்கான பதிலை வெளிப் படுத்த ரில்வின் தரப்பினர் முன்வரவேண்டும்.

தமிழர்கள் இம்முறை தேசிய மக்கள் சக்தியினருக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களை வழங்கியிருக்கின்றனர் என்பது உண்மை. ஆனால், அந்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் தேசிய மக்கள் சக்தி மீதான அன்பின் வெளிப்பாடாக அல்லாமல், தமிழ்த்தேசியக் கட்சிகள் மீதான விரக்தியின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும் என்ற சிந்தனையின் விளைவுதான் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியாக மாறியது.

ஆனால், 'தெரியாத தேவதையை விடவும், தெரிந்த சாத்தான் எவ்வளவோ பரவாயில்லை' என்பதாகத்தான் தேசிய மக்கள் சக்தியின் அண்மைக்காலச் செயற்பாடுகள் சென்றுகொண்டிருக்கின்றன. உச்சக்கட்டமாக தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் இது கனதியாக எதிரொலித்துள்ளது. இதே பாதையில் பயணப்பட்டு தங்களின் வாக்கு வங்கிகளை தேசிய மக்கள் சக்தியினர் முற்றாக இழப்பதற்கு முன்னர், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதே உசிதமாக அமையும். சுயதம்பட்டங்களால் ஒருபோதும் தமிழர்கள் உங்களைத் தக்க வைக்கப் போவதில்லை.



# இலங்கையின் நட்புறவை பலப்படுத்துவோம்



*வியட்நாம் பிரதிப் பிரதமர் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.15
இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான ஒத்துழைப்பையும் நட்புறவையும் மேலும் பலப்படுத்திக்கொள்ள அர்ப்பணிப்புடன் உள்ளோம் என்று வியட்நாம் பிரதிப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான புய் தான் சன் தெரிவித்துள்ளார்.
கடந்த புதன்கிழமை ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கும், வியட்நாமுக்கும் இடையிலான நீண்டகால பொருளாதார ஒத்துழைப்பைப் பலப்படுத்திக்கொள்வதற்கு இருநாடுகளுக்கும் போதிய வாய்ப்புகள் காணப்படு கின்றன. விவசாயம், கல்வி, மதம், கலாசாரம், சுற்றுலா மற்றும் விமான சேவைகள் போன்ற துறைகளில் இலங்கையில் முதலீடு செய்ய வியட்நாம் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-இ)

## மின்தடைக்கு முறைப்பாடு



கொழும்பு, பெப்.15
நாடுமுழுவதிலும் ஏற்பட்ட மின்தடை குறித்து விசாரணை நடத்துமாறு கோரி குற்றப்புலனாய்வுப் பிரிவில், மின் பாவனையாளர் ஒன்றியத்தால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இலங்கை மின்பாவனையாளர் ஒன்றியத்தின் தலைவர் சஞ்சீவ தம்மிக்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். மின்சாரசபையின் பணியாளர்கள் நாட்டின் அரசியல் சாசனத்தை மீறிச் செயற்பட்டுள்ளனர் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## நாட்டின் பிரச்சினைகளுக்கு பாதீட்டில் தீர்வு

கொழும்பு, பெப். 15
நாட்டில் நிலவும் பல பிரச்சினைகளுக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி சிறந்த தீர்வு கிடைக்கும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.
நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 17 ஆம் திகதி பாதீட்டை முன்வைக்கவுள்ளார்.
அதிபர், ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்களுக்கு பாதீட்டில் சம்பள உயர்வு கிடைக்கப் பெறவுள்ளது.
நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளும் ஈடேறும் வகையிலேயே பாதீடு அமையவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## கட்டுத்துவக்குடன் ஒருவர் கைது


கிளிநொச்சி, பெப்.15
கிளிநொச்சி முள்ளியவளைப் பகுதியில் கட்டுத் துப்பாக்கி வைத்திருந்த ஒருவரை முழங்காவில் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்துள்ளனர்.
சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## பேரவாவியின் தூய்மைக்கு நிபுணர் குழு நியமனம்

கொழும்பு, பெப்.15
பேரவாவியைச் சுத்தப்படுத்தும் பணியை மேற்பார்வையிடவும், அதன் வளர்ச்சிக்கான பரிந்துரைகளை சமர்ப்பிக்கவும் நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவில் துறைசார் நிபுணர்கள் 12 பேர் அடங்கியுள்ளனர் என நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார். ஏரியைச் சுத்தப்படுத்த பலமுறை முயற்சித்தும், முந்தைய திட்டங்கள் வெற்றியளிக்காத நிலையில் சர்வதேச நடைமுறைகளின் அடிப்படையில் ஒரு வேலைத்திட்டம் இந்தக் குழுவால் தயாரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டவிரோதமானது என்பதாலேயே விகாரைக்கு எதிராகப் போராட்டம்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.15

**தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரை சட்டவிரோதமானது என்பதை அங்குவந்து வழிபடும் சிங்கள அப்பாவி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றவேண்டும் என்று வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சட்டவிதிமுறைகளை மீறி இந்த விகாரையை இராணுவம் கட்டிமுடித்திருக்கின்றது. நாங்கள் இனவாதிகளோ, மதவாதிகளோ அல்லர். மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அடாத்தாகக் கட்டப்பட்டமையாலேயே விகாரையை எதிர்த்துப் போராடுகின்றோம். தமிழ் மக்களின் உரிமைக்கு எதிரான செயற்பாடுகள் எவையானாலும் நாம் எதிர்ப்போம்.

சட்டத்தை மீறி ஒரு பெருமகன் கட்டடம் கட்டினால் அது எவ்வாறு அகற்றப்படுமோ, அவ்வாறே இந்தச் சட்டவிரோத விகாரையும் அகற்றப்படவேண்டும். இந்த விகாரை சட்டபூர்வமானது அல்ல என்பதை அப்பாவிச் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். புத்தரின் பெயரால் நடக்கும் அநியாயங்களை விளங்கிக் கொள்ளவேண்டும்.

போராட்டங்கள் தொடர்ந்து பலமாக அமைந்தால்தான் தீர்வை அடையலாம். அடுத்த பௌர்ணமிக்கு அதிகளவில் மக்கள் திரளவேண்டும்- என்றார். (எ-125)

# சுபீட்சம் அறக்கொடையால் உதவித்திட்டம் கையளிப்பு



யாழ்ப்பாணம்,பெப்.15

கொழும்புத்துறையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அமரர்களான சித்த ஆயுள்வேத பேராமியோபதி, விஷகடி வைத்தியரான க.சூசைப்பிள்ளை சூசைப்பரியாரியார் மற்றும் சென்ஜோன்ஸ் பழையமாணவனும் சிறந்த கிரிக்கட் வீரருமான யே. சுபீட்சன் ரிபியுஸ் ஆகியோரின் ஞாபகார்த்த அமைப்பான சுபீட்சம் அறக்கொடை நிதியத்தின் முதலாவது உதவித்திட்ட நிகழ்வு நிதிய ஸ்தாபகர் எஸ்.யேசுதாஸின் இல்லத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது பெண்தலைமைத்துவப் பயனாளிகள் 40 பேருக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ச-33)





# மும்மொழித் தினவிழா

யாழ்ப்பாணம், பெப். 15

கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் மும்மொழித் தினவிழா வித்தியாலய அதிபர் த. தயானந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன் கலந்துகொண்டார். ஆங்கில தனிப்பாடல் மற்றும் கூட்டுப் பாடல், தமிழ் நாட்டார் பாடல்கள், தனிநடிப்பு, சிங்கள நாடகம் என்பன விழாவைச் சிறப்பித்தன. (ச- 25)





# முதலீட்டாளர்களுடன் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.15

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அதற்கான வழிவகைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன் முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் தொடர்புடைய திணைக்களங்களையும் அழைத்துச் சீரான காலஇடைவெளிகளில் கலந்துரையாடுவது என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ச-41-27,66,9)

## வவுனியாவில்

# பொலிஸ் அதிகாரிகள் மூவருக்கு இடமாற்றம்!

வவுனியா, பெப். 15

வவுனியாவில் மாவட்டக் குற்றவிசாரணைப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தால் தற்போது நாடளாவிய ரீதியில் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் அவற்றில் இவர்களும் உள்ளடங்குகின்றனர். (ச-22,18)



# கிளிநொச்சியில் வயல் அறுவடைவிழா

கிளிநொச்சி, பெப்.15

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பரசூட் முறையில் நடுகை செய்யப்பட்ட 366 வெள்ளை இனநெல் அறுவடை விழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தருமபுரம் விவசாயப் போதனாசிரியர் க.சரணியா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 08 . 1964



மறைவு 13 . 02 . 2025

### அமரர் செல்வமலர் சிவகுமாரன்

இணுவில் மேற்கு கோவில் வாசலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்வமலர் சிவகுமாரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (13.02.2025) வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துரைராசா சிவகுமாரனின் (உரிமையாளர்-கணேசன் சென்ரர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் கதிர்காமநாயகி தம்பதியின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகளும் சிந்துஜா (பிரதேச செயலகம்-யாழ்ப்பாணம்), சிவகாசிக்கா (Quantity Surveyor) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரகுநாதன் (உரிமையாளர்-STR Construction), பிரதீபன் (DFCC Bank) ஆகியோரின் பாசத்திற்குரிய மாமியாரும், விஸ்வகனின் அன்புப் பேர்த்தியும், ஜெயகுமரன் (நோர்வே), ஜெயகலா (கனடா), ஸ்ரீகலைவாணி (திருகோணமலை), தனகேசவன் (லண்டன்), பிரசாந்தி (ஆசிரியை-யாழ் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகராஜா (சிவசக்தி-வவுனியா), காலஞ்சென்றவர்களான ஏரம்பமூர்த்தி, சிவானந்தன் ஆகியோரின் அன்பு மருமகளும், கருணை தவசோதியின் பெறாமகளும், நந்தினி (நோர்வே), கணேசகுமார் (துறைமுக அதிகார சபை-திருகோணமலை), பிரதீபா (லண்டன்), சுரபாஸ்கரன் (ஆசிரியர்-யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி, சின்னராசா, அருட்செல்வி காலஞ்சென்ற யோகதாஸ் மற்றும் காலஞ்சென்ற சிவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், லோகநாயகி, கம்லாம்பிகை ஆகியோரின் சகலியும், சிறிதரன் (மைத்துனியின் கணவர்) யதுர்சன், ஜனகன், அஸ்வின், அவ்யா ஆகியோரின் பெரியம்மாவும் ஞானலோஜினி, கோகுலன் இராகுலன் (வைத்தியர்), கோபிதன், சர்மிலன் (வைத்தியர்), பிரதீபன், சிவரூபன், நிதேஷன் ஆகியோரின் சிறிய தாயும் யகதுர்க்ஷா, தீப்தன், ஷாருகேசி, ஆரங்கன், சஹானா, நிறஞ்சலா, லக்ஷாயினி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (கே.கே.எஸ் வீதி, இணுவில் மேற்கு இணுவில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(14.02.2025 அன்று பிரசுரமான விளம்பரத்தில் காலஞ்சென்ற துரைராசா சிவகுமாரன் என்று தவறுதலாக பிரசுரமானதை திருத்தி வாசிக்கவும்)

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 44326) V-1

**077 612 8424, 077991 7533**

# கிளிநொச்சி மருத்துவமனையில் காலாவதியான தீயணைப்புக் கருவிகள்

## *அதிகாரிகள் அசமந்தம்; மக்கள் விசனம்*

கிளிநொச்சி, பெப். 15

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலுள்ள எக்ஸ்ரே பிரிவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திடீரென தீவிபத்து நிகழ்ந்துள்ளது.

இதன்போது தீயைக் கட்டுப்படுத்த மருத்துவமனையில் பொருத்தப்பட்டிருந்த தீயணைப்புக் கருவிகளைப் பயன்படுத்தியபோது அவை காலாவதியாகி பல வருடங்கள் கடந்துள்ளமை தெரியவந்துள்ளது. அதனையடுத்து தீயைக் கட்டுப்படுத்த நெதர்லாந்து அரசின் நிதியுதவியில் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விசேட பெண்கள் மருத்துவமனைக் கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த தீயணைப்புக் கருவிகளே பயன்படுத்தப்பட்டன.

மருத்துவமனையிலுள்ள தீயணைப்புக் கருவிகள் காலாவதியாகிப் பல வருடங்கள் கடந்தும் அவை மாற்றப்படாதிருந்தமை அதிகாரிகளின் அக்கறையின்மையை வெளிப்படுத்துகிறது எனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-25, 214)

# கூட்டு அரசியல் பயணத்துக்காக ரணில் தலைமையில் சந்திப்பு!

நாடாளுமன்றத்துக்கு வெளியில் கூட்டு அரசியல் பயணத்தை முன்னெடுப்பது தொடர்பில்


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதலைமையில்முக்கியத்துவம்மிக்க கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இச்சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, வஜிர அபேவர்தன, உதய கம்மன்பில உட்பட எதிரணி அரசியல்வாதிகள் பங்கேற்றிருந்தனர். மொட்டுக் கட்சியிலிருந்து சுயாதீனமான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், நமல் லான்சா அணியினரும் பங்கேற்றிருந்தனர்.

அநுர அரசாங்கத்தின் அணுகுமுறைகள், எதிரணிகளின் அரசியல் பயணம் எவ்வாறு அமையவேண்டும், அடுத்து நடைபெறவுள்ள தேர்தல் என்பன உட்பட பிரதான பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியினர் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை. (எ-44)

## மரண அறிவித்தல்

மலர்வு 15 . 04 . 1939



உதிர்வு 13 . 02 . 2025

### சரவணமுத்து சின்னத்துரை

உசனை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சின்னத்துரை நேற்றுமுன்தினம் (13.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - செங்கமலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - மீனாட்சி தம்பதியரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குலசேகரம், நல்லதங்கம், வினாசித்தம்பி, அமிர்தவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், நாகேஸ்வரி, இரா்சரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், வசந்தி (மீசாலை), ஜெயந்தி (லண்டன்), காலஞ்சென்ற சுகந்தி (கிளிநொச்சி) மற்றும் ஆனந்தி (பிரான்ஸ்), நாகநந்தன் (தம்பி - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவானந்தம் (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி), வீரசிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற செல்வதாதன் மற்றும் யோகராசா (பிரான்ஸ்), துளசிகா (மீசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தா்மிலா (விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்), பேராசிரியர் கிறிஸ்ரி ஜெயசீலன் (யாழ். பல்கலைக்கழகம்), திலீபன் (பொறியியலாளர் / நியூசிலாந்து), கஜனி (நியூசிலாந்து), சதீஷன் M.A (வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம்), பவித்ரா (ஆசிரியர், டிறிபேக்கல்லூரி), பத்மஜா (கொழும்பு), சத்யன் (பொறியியலாளர் - கொழும்பு), யசிந்தன் (பாமசி உதவியாளர் - லண்டன்), தாரகா (லண்டன்), நிறோஜிதா (மருத்துவர் - லண்டன்), இலக்கியா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கொழும்பு), சகிக்கா (பிரான்ஸ்), ஓவியா, இறயன், நிதியா ஆகியோரின் அன்புப் பேரனும், அக்ஷனா, ஆத்மிகா, காஷினி, அபிஜித், அருனிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் மீசாலை வடக்கில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**“வசந்தி வாசம்”**
**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**077 549 6207, 0033 7677 53138,**
**0094 7755 66616, 0044 7448 416793,**
**0041 7919 54727**

(CS/44824) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 04 . 1941



இறப்பு 12 . 02 . 2025

### விக்கினேஸ்வரி நடராசா

மலேசியாவை பிறப்பிடமாகவும் கைதடிச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரி நடராசா கடந்த 12.02.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசா (ஓய்வுபெற்ற அதிபர்-கைதடி விக்கினேஸ்வரா) அவர்களின் அன்பு மனைவியும், கலா (UK), கீதா (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவீந்திரன் (UK), சிறீமோகன் (UK),ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.ஜனனி (UK), Dr. ஆரணி (UK), கிஸ்சான் (UK), விசாகன் (UK), ஆர்த்தி (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஈஸ்வரி இல்லம்**
**கைதடிச் சந்தி,**
**கைதடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 155 2482**

(CS/57489) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

- மேசன் - Rs 3000.00
- மேசன் உதவியாளர் - Rs 2500.00
- வெல்டர் உதவியாளர் - Rs 2000.00
- வயறிங் - Rs 3000.00
- பிளமிங் - Rs 3000.00
- தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3000.00

தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு :- 077 210 0749
(காலை 8.30 - மாலை 5.00 வரை)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(CS/57515) J-1

## பகுதிநேர உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் நீண்டகாலமாக தனித்தன்மையுடன் இயங்கிவரும் பிரபல்யமான காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைத்துறையில் பணி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- அரச உத்தியோகம் செய்வோர்.
- பட்டதாரி மாணவர்கள் (உடனடி வேலை தேடுபவர்)
- பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய உயர் கல்வி பயிலும் மாணவர்கள்.
- உயர்தரப் பரீட்சை எழுதியோர்.
- உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றோர். (தேகாரோக்கியம் அவசியம்)
- தனியார் துறையில் பணியாற்றுவோர்.
- வியாபாரம், சுயதொழில் முயற்சியில் உள்ளோர்.
- கல்வித்தகைமை :- க.பொ.த (சா/த) மற்றும் உயர்தரம்.

ஆர்வமுடையோர் உங்களது சுயவிபரக் கோவையை (CV) கீழ்வரும் Whatsapp இலக்கத்திற்கு இம்மாதம் 20.02.2025 ற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

077 934 8512

(CS/57503) J-1

## Assistant Accountant Vacancy

- Exceptional Skill in Accounting Software System.
- Good Communication Skill in English.
- Minimum 3 Years Experence in the industry
- Age Limit & Gender :- Seeking for a Male & Female Over 23 age.
- Salary 60 000/-

If you are interestd please send your CV with in 03 Days to the Following email Address.

mkpfeed2021@gmail.com

No: 09, Urumpirai Boundary Road, Palali Road, Kondavil, Jaffna.

021 - 221 5565

077 6028 670, 077 2079 127

(CS/57479) J-1

## மணமகள் தேவை

1. திருநெல்வேலி. இந்து. விஸ்வகுலம், 1990. உத்திரட்டாதி. BSc, in Civil Engineering, UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
2. காங்கேசன்துறை இந்து. கௌரவகுலம் (K), 1988. ரோகினி. MSc, France Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
3. வடமராட்சி. இந்து. கௌரவகுலம். (V),1998. மிருகசீரிடம். Bussiness Management, UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
4. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1992. சுவாதி. Graduate, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
5. சுன்னாகம். இந்து. கௌரவகுலம் (K). 1983. புனர்பூசம். Graduate, Network Engineer, USA Citizen, Dovorce மணமகனுக்கு மணமகள் தேவை.
6. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம்.(V), 1989. அத்தம். IT Engineer Germeny Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
7. மல்லாகம். இந்து. விஸ்வகுலம். 1988. பூரம். BSc,G/teacher மணமகனுக்கு மணமகள் தேவை.
8. அனலைதீவு. இந்து. கௌரவகுலம். (V), 1989. ஆயிலியம். BSc (Sri Lanka), Quantity Surveying மணமகனுக்கு மணமகள் தேவை.
9. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K), 1992. விசாகம். Graduate, Accountant, Germany + UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
10. இணுவில் - உரும்பிராய். இந்து. கௌரவகுலம் (V), 1989. பூசம். Masters of Professional , Accounting, Canada Citizen

எம்மிடம் எல்லா ஜாதியிலும்.
எல்லா நாட்டிலும் மணமகள்களும். மணமகன்களும் உண்டு.

S.Sharma J.P.
www.thaalee.com
திருமண சேவை

077 539 3728
whatsap: 077 803 8193

# அமெ. தூதுவருக்கெதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

இலங்கையின் இளையோர் மத்தியில் ஓரினச் சேர்க்கையை அமெரிக்கா ஊக்குவிப்பதாகக் குற்றஞ்சாட்டி, இலங்கைப் பிரிவினைக்கு எதிரான கூட்டணிக்குழு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக, நேற்றுமுந்தினம் வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டது.

தற்போதைய அமெரிக்கத் தூதுவர், உள்ளூர் இளைஞர்கள் மத்தியில் ஓரினச்சேர்க்கை சித்தாந்தங்களை புகுத்துகிறார்.

எனவே, அவர் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 2022 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பதவிநீக்கம் செய்ய வழிவகுத்த வெகுஜனப் போராட்டங்களுக்கு யு.எஸ்.எய்ட் நிதி பயன்படுத்தப்பட்டதா? என்பது தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-25-6)

## கடை வாடகைக்கு

கல்வியன்காடு பிரதான வீதி
3ம் கட்டையில்
கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 175 0746

(CS/2528) J-1

## CSL CENTER FOR SYSTEMATIC LEARNING

Grade 3 - Grade 11 (O/L)

Maths & English

கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான விசேட செயற்திட்டம்.


CSL இன் 4 அல்லது 6 மாத கால செயற்திட்டத்தில் இணைந்து உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிடுங்கள்.

077 114 8894, 076 205 5169

(CS/57517) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 03 . 1993



மறைவு
27 . 12 . 2024

### ரவிக்குமார் துசாந்தன்

மீசாலை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட ரவிக்குமார் துசாந்தன் கடந்த 27.12.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் கமலாதேவி (இருபாலை), காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா (மீசாலை), சிவப்பிரகாசம் - ரஞ்சிதமலர் (மீசாலை) தம்பதியரின் அன்புப் பேரனும், ரவிக்குமார் - உதயமலர் தம்பதியரின் அன்பு மகனும், சோபனா (பிரான்ஸ்), டிசாந்தன் (லண்டன்), பிரியந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யசன் (பிரான்ஸ்), மிதுசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் சாந்தகுமார், இந்திரகுமார் (இணுவில்), இராசேந்திரகுமார், உதயராணி (கட்டுவன்), தர்ஷினி (பிரான்ஸ்), தனுசா (லண்டன்) ஆகியோரின் பெறாமகனும், வசந்தகுமாரி (இருபாலை). காலஞ்சென்ற ஜெயக்குமாரி, உதயகுமார் (லண்டன்), சிவகுமார் (முக்கொம்பன்), சசிகுமார் (சுவிஸ்), கருணகுமார் (பிரான்ஸ்), ஆனந்தகுமார் (மீசாலை), சசிகரன் (லண்டன்), சிவரஞ்சினி (லண்டன்), சிவசுதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2025) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரயைக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 57498) N-1

# பொன்விழா

யாழ்.., பெப்.15

மயிலணி ஜனசக்தி முன்பள்ளியின் 50ஆவது ஆண்டு பொன்விழா ஜனசக்தி சனசமூகத் தலைவர் இ.தனுராஜ் தலைமையில் ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் செ ஜெயா தம்பையா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் தெற்குப் பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சர்மிலா மயூரன், சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.எஸ். ராமநாயக்க, உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி மோகன்ராஜ் கார்த்திகா, கௌரவ விருந்தினராக ஜே/195 கிராம சேவகர் திருமதி தினேஸ் சசிகலா, ஜே/202 கிராம சேவகர் சுப்பிரமணியம் சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானியப் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், பெப். 15

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், 'சிறுதானியங்களை மீள முடிசூட்டிடுவோம்' எனும் தொனிப்பொருளிலான சிறுதானியப் பொங்கல் விழா ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றலில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ச-25.66)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**செல்வரதி கிரிதரன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: திருதியை

தோற்றம்
25.03.1966

மறைவு
27.02.2024

அன்பான அம்மாவிற்கு!

அணிகலனாய் இருந்தீரே
அகிலத்தில் உமைப்போல ஆருளரோ - இப்பாரினிலே
ஆண்டொன்று ஆனதினால் ஆறிடுமோ எம் துயரம்
ஆண்டுகள் பல ஆனாலும் ஆனமுகம் - மறக்கலாமோ
பேசிடும் சொந்தங்கள் பாசமிகு பிள்ளைகளை
பாரினிலே தவிக்கவிட்டு வெகுதூரம் சென்றீரோ
போனவழி தேடுகின்றோம் மீண்டு வரமாட்டீரோ
உண்ணாமல் உறங்காமல் உயிரோடு மன்றாடி
கண்ணான உன் குடும்பத்துக்காய் காலமெல்லாம் உழைத்தீரே
எண்ணி எண்ணி தவிக்கின்றோம்இதயம் தான் கலங்குதம்மா
மண்ணிலே வாழும் வரை மறவோமே உன் வதனம்
அம்மா உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.57475) (N-1)

## மரண அறிவித்தல்

மலர்வு
28.10.1929



உதிர்வு
10.02.2025

**திரு செல்லத்துரை சின்னத்தம்பி**

புன்னாலைக்கட்டுவன் தெற்கு உடையார்வளவைப் பிறப்பிடமாகவும், இரத்னபுரி, கொழும்பு, சிட்னி, ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு செல்லத்துரை சின்னத்தம்பி கடந்த 10.02.2025 திங்கட்கிழமை சிட்னியில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரன் (சிட்னி), பரமேஸ்வரன் (சிட்னி, Spiceland-Flemington) காலஞ்சென்ற பிறிந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலேஸ்வரி (சிட்னி), மாதினி (சிட்னி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வித்யா, Dr அபிதேவ், சரவணன், கர்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி, நாகேஸ்வரி, பூபதி, மகேஸ்வரி, சிவகாமிப்பிள்ளை (கங்கா), இளைய தம்பி (வாப்பா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சின்னத்தம்பி, குணரட்ணம், கதிரித்தம்பி, மற்றும் சத்யதேவி (புன்னாலைக்கட்டுவன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நாளை (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9:30 மணிக்கு Rockwood Cemetery, south chapel லில் வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பி.ப 12:30 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நகுலேஸ்வரன் - +61 422 442 382
பரமேஸ்வரன் - +61 412 636 484

தகவல்:
குடும்பத்தினர்

(CS/2510) J-1

## மரண அறிவித்தல்



**செல்லையா ஸ்ரீரெங்கநாதன்**

(சீனியர் தேநீர்க்கடை - வைத்தீஸ்வரா சந்தி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 8ம் வட்டாரம், மடத்துவெளி, பிரான்ஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஸ்ரீரெங்கநாதன் கடந்த 06.02.2025 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவநாயகம் மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், சுனித்தா (ஜெயந்தி) அவர்களின் அன்புக் கணவரும், கிஷானா, டிர்ஷிகா, சஸ்விகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்ஷினி, டினேஷ்குமார், காந்தரூபி, யசிந்தாயினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாகீசன் (ஈசன்), பிரசாந்தி, கிருபராஜ், ரமேஷ்குமார், ஜனகன் ஆகியோரின் மைத்துனரும், தீபா அவர்களின் அன்புச் சகலனும், வோவிதா - தர்ஷிகன், யதுஷா, பிரதீபா, தனுஷாந், கிருஷ்னி, தஸ்வின், கிஷான், ராஷ்மினி, ராஷ்மிகா, ரிதுஷ்னி, யது, வவின், ஜிஷான் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிந்துஜன், அதுஷ்கா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா, கந்தசாமி மற்றும் பத்மநாதன், சிவலிங்கம், அமிர்தலிங்கம், சண்முகநாதன், கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகனும், தர்விதா, தர்ணியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (19.02.2025) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம்
31.12.1974

மறைவு
06.02.2025

195, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்

ஜெயந்தி (மனைவி) - 0033 601 013 022
வாகீசன் (அத்தான்) - 077 218 7697
டினேஷ்குமார் (சகோதரன்) - 0044 741 177 0938

(CS/57512) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனைப்பொருளியல் கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்ளத்தின் அனுசரணையுடன் கண்டாவளைப் பிரதேச செயலக மகளிர் அபிருத்தி நிலையத்தின் மனைப் பொருளியல் கண்காட்சி, விசுவமடு மத்தி சனசமூக நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது . கண்டாவளைப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் கணக்காளர் பி.கார்த்திகா கலந்து கொண்டார். (ச- 25, 113)

## பொதிசெய்யப்பட்ட....

வெளிநாடுகளில் இருந்து பொதிசெய்யப்பட்ட மீன்களை இறக்குமதி செய்வதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் டொலரும் தேவையற்ற வகையில் வெளிச்செல்கின்றது என்று உள்ளூர் மீன் உற்பத்தியாளர்கள் அரசாங்கத்துக்குத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வந்தனர். இதைத் தொடர்ந்தே, இலங்கைக்குள் பொதிசெய்யப்பட்ட மீன்களை இறக்குமதி செய்வது நிறுத்தப்படும் என்ற வாக்குறுதியை அரசாங்கம் அவர்களுக்கு வழங்கியுள்ளது. (அ-ம-இ)

## மன்னார்....

யாழ்ப்பாணம், பெப். 15

அதானி நிறுவனத்தின் காற்றாலைத் திட்டத்தை சீனாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ வழங்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்காக வரவு - செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ வழங்குவதற்காக அதானி நிறுவனத்துடனான காற்றாலை ஒப்பந்தத்தை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவரவில்லை. அதானியின் திட்டத்தை தற்போது சரியென ஏற்றுக்கொண்டால், இன்னும் சில காலங்களின் பின்னர் எமது முடிவுக்காக வருந்தும் நிலை ஏற்படலாம்.

அதானி நிறுவனத்தின் காற்றாலைத் திட்டத்தால் நாட்டு மக்களுக்கும், மின்சார சபைக்கும், நாட்டுக்கும் பயன்கிட்டுமா? என்பது தொடர்பில்தான் நாம் ஆராய்ந்தோமே தவிர, வேறு எவருக்கும் வழங்குவதற்காக அந்தத் திட்டங்களை நாம் நிறுத்திக்கொள்ளவில்லை.

அவருக்குக் கொடுப்பதா? இவருக்குக் கொடுப்பதா? என்று விவாதிப்பதையும் பார்க்க புலம்பெயர் மக்களை இங்கு அழைத்து திட்டங்களை மேற்கொள்ளவே நாம் எண்ணியுள்ளோம். ஆகவே காற்றாலைத் திட்டத்திலிருந்து அதானி குழுமம் விலகியதில் எவ்வித அரசியல் உள்நோக்கமும் கிடையாது - என்றார். (அ-ம-27)

## பட்டதாரிகளின்...

கப் போராடுகின்றபோது எங்களுக்குப் புலனாய்வுப் பிரிவினரால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. சிலர் தொலைபேசி வழியாகவும் அச்சுறுத்தல்களை எதிர் கொண்டுள்ளனர். எனினும், நாங்கள் தொடர்ந்து போராடுவதில் உறுதியாகவுள்ளோம். நாங்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடவில்லை. மாறாக வேலைகளைக் கோரியே போராடுகின்றோம் என்றனர்.

இது தொடர்பில் அமைச்சர் சந்திரசேகரனிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:-

போராட்டங்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு (வேலையற்ற பட்டதாரிகளுக்கு) உரிமையுள்ளது. எனவே, அவர்களை புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர் அச்சுறுத்தினால், அது தொடர்பில் எம்மிடம் முறையிட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ-ம-27)

## மயங்கி...

முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது. மேசன் வேலைக்காக மட்டக்களப்பில் இருந்து வருகைதந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பேரின்பன் கோகிலவாசன் (வயது 59) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இறப்புவிசாரணைகளை நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26-27)

## உத்தரதேவியின்...

காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று இலங்கையின் ரயில் சேவை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ரயில் இயந்திரங்களுக்குத் தொடர்ச்சியாகக் காணப்படும் பற்றாக்குறைகள் மற்றும் பழுதுகள் காரணமாகவே உத்தர தேவி ரயில்சேவை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (அ-ம-125)



## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் **திருமதி கலாஜினி விக்டர்** அவர்களின் அன்புத் தந்தையாகிய

**கணபதி முருகேசு**


அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர், நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சந்திரசேகரம்

**(உரிமையாளர்-விஸ்னுகரன்ஸ் பான்சி, சுன்னாகம் AVP- சந்திரன்)**



காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சந்திரசேகரம் அவர்கள் நேற்று முன்தினம் (13.01.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-அன்னமுத்து தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலர் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற P.T.குமாரசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற கனகசபை (அன்னம் ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (AVP- சுன்னாகம்), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் டாம்பிகாதேவி (கிளிநொச்சி), காலஞ்சென்ற நவரத்தினம் (முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர்) மற்றும் இராஜேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி, காலஞ்சென்ற கனகம்மா, லோகாம்பிகை, காலஞ்சென்ற கனகசிங்கம், அரியமலர் (சோதிமாளிகை), தனபாலசிங்கம் (VTS கந்தானை), உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வன்னியசிங்கம் (பிரான்ஸ்), தர்மகுலசிங்கம் (லண்டன்), சோதிமலர் (லண்டன்), ஆகியோரின் மைத்துனரும் விஜயகாந்தன் (லண்டன்), விஸ்னுகரன் (லண்டன்), விஜயரூபன் (விஸ்னுகரன் ஸ்பான்சி-சுன்னாகம்), விஜயதாஸ் (லண்டன்), விஜயானந்தா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கவிதா, ஜஸ்விக்கா, ஜெயவீரலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரிவியன், அருஷா, அபிநயா, அபிருத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**தோற்றம்** 28.06.1957 **மறைவு** 13.02.2025

**தொடர்பு:**
**021 224 1290, 077 581 1192**
**077 929 5932**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்துக்கு...

இது தொடர்பில் அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:- 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பில் நாங்கள் மாவட்டந்தோறும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம். முன்மொழிவுகளையும் பெற்றுவருகின்றோம். அந்தவகையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்காக 500 மில்லியன் ரூபாவை சிறப்பு ஒதுக்கீடாக ஒதுக்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் தேவைப்பாடுகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான முன்மொழிவையும் ஜனாதிபதி கோரியுள்ளார். அவற்றைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். இது தொடர்பில் இன்று (நேற்று) யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட சிறப்புக் கலந்துரையாடலிலும் நான் தெரியப்படுத்தியுள்ளேன்.

எனவே, அனைவருடைய கருத்துக்களையும் உள்வாங்கி, எந்தப் புறக்கணிப்பும் பாரபட்சமும் இல்லாமல் ஒரு சிறந்த முன்மொழிவை நாங்கள் சமர்ப்பிக்கவுள்ளோம். வடக்கு - கிழக்கை மிகச்சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதில் நாம் உறுதியாகவுள்ளோம்- என்றார். (ம-26)

## எம்.பி.க்கள்...

ருத்திப் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள் தற்போது இல்லாத காரணத்தால் 56 மில்லியன் ரூபா பெறுமதியான ஒதுக்கீட்டை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினூடாக மேற்கொள்வதற்கு முன்மொழிவு முன்வைக் கப்பட்டது. இதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

'பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள் இல்லாவிட்டால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவே அந்த ஒதுக்கீடுகளைப் பகிரவேண்டும். அதுவே பொருத்தமான நடவடிக்கையாக அமையும். முன்னாள் ஜனாதிபதி ரணிலின் ஆட்சிக்காலத்திலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவே அந்த ஒதுக்கீடுகள் பகிரப்பட்டன' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து, அவரின் கருத்து ஏற்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக அந்தத் தொகைக்கான முன்மொழிவுகளை ஏற்பது என்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம-26)

## முன்னாள்...

அழகரத்தினம் வனகுலராசா என்பவரே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தமிழர்களுக்கு தனி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும், மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவமுகாம்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும், தமிழினத் துரோகிகள் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், பிரதேசவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இல்லாதவர்கள் இருந்ததாகக் கூறி, வெளிநாடு மற்றும் உள்நாட்டில் சக போராளிகளை காரணம் காட்டி, பணம் வசூலித்து மேற்கொள்ளும் உல்லாச வாழ்வு நிறுத்தப்பட வேண்டும், முதியோர் மற்றும் இளையோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், காணி மற்றும் வீடு இல்லாதவர்களுக்குக் காணி, வீடு வழங்கப்பட வேண்டும், இலங்கையில் யாசகம் எடுப்பவர்களின் வீதம் அதிகரித்துள்ளதால், யாசகம் எடுப்பவர்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளையே அவர் முன்வைத்துள்ளார். (ம-27)

## தபால்...

நிலையை அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மொறட்டுவயில் இருந்து இரவு 6:55 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் தபால் ரயில்சேவை கல்கிசையை இரவு 19:04 மணியளவிலும், தெகிவளையை 19:09 மணியயளவிலும், வெள்ளவத்தையை 19:15 மணியளவிலும், பம்பலபிட்டியை 19:20 மணியளவிலும், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை 19:29 மணியளவிலும் அடைந்து, இரவு 8 மணிக்கு காங்கேசன்துறை நோக்கி பயணிக்க ஆரம்பிக்கும்.

இதேவேளை காங்கேசன்துறையிலிருந்து இரவு 8 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் தபால் ரயில்சேவை யாழ்பாணத்தை இரவு 8:35 மணிக்கும், கொழும்பு கோட்டையினை காலை 4:40 மணிக்கும், தொடர்ந்து பம்பலபிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை ஆகிய ரயில்நிலையங்களில் தரித்து மொறட்டுவ ரயில் நிலையத்தை காலை 5:26 மணிக்கு அடையும்; என்று தெரியவருகின்றது. (ம-125)

## விசேட...

நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரம ரத்ன தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஏற்கனவே பெறப்பட்டிருந்த வேட்புமனுக்களை ரத்துச்செய்து புதிதாக வேட்புமனுக்களைக் கோரும் வகையில் சட்டத்திருத்தம் அரசாங்கத்தால் செய்யப்பட்டது. அரசாங்கத்தின் இந்த முடிவை ஆட்சேபித்து சில தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கின் தீர்ப்பு நாடாளுமன்றத்துக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அதை அறிவிப்பதற்காக நாடாளுமன்றம் நேற்றுக் கூட்டப்பட்டது.

இதன்போது உயர்நீதிமன்றத் தீர்ப்பை வாசித்த சபாநாயகர் தெரிவித்ததாவது: அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டு மூன்று நீதிபதிகள் கொண்ட குழாமினால் விசாரிக்கப்பட்ட 'உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்)' எனும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, சட்டமூலம் முழுமையாகவும் மற்றும் குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையொன்றின் மூலம் மாத்திரமே அங்கீகரிக்கப்பட முடியும் என நீதிபதிகள் இருவர் (பெரும்பான்மையான நீதிபதிகள்) தீர்ப்பளித்துள்ளனர். மற்றைய நீதிபதி சாதாரண பெரும்பான்மையுடன் இந்தச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவை நிறைவேற்ற முடியும் என்று தீர்ப்பு வழங்கியுள்ளார். (ம-44)

## கஜேந்திரகுமாருக்கு...

பொன்னம்பலம் சார்பில் சட்டத்தரணி கந்தசாமி மகிந்தன் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

வழக்குத் தொடுநரான பலாலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பௌர்ணமி தினத்தன்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரும், பொதுமக்களும் அமைதியைக் குழப்பும் வகையில் நடந்து கொண்டனர் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டு அவை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பொலிஸ் பொறுப்பதிகாரியின் சமர்ப்பணங்களுக்கும், வழக்குக்கும் தொடர்பில்லை என்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கந்தசாமி மகிந்தன் சுட்டிக்காட்டியதுடன், வழக்கை முகத்தோற்ற அளவில் தள்ளுபடிசெய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குப் பிணை வழங்கியதுடன், வழக்கை ஜூன் மாதம் 26ஆம் திகதிக்குத் தவணையிட்டார்.

**பின்னணி**

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் பொதுமக்களின் காணியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அகற்றப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். ஜனாதிபதி அநுரவின் தலைமையில் ஜனவரி மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அவர் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதையடுத்து, தையிட்டி விகாரையை இடிப்பதற்கு ஒன்றுபடுமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொதுமக்களை அழைப்பது போன்று ஒரு துண்டுப்பிரசுரம் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டது. அந்த துண்டுப்பிரசு ரத்துக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும், அது போலியானது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் உடனடியாகவே தெளிவுபடுத்தலை வழங்கியிருந்தார். எனினும், இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்து கஜேந்திரகுமார் எம்.பி.க்கு அழைப்பாணை அனுப்பியிருந்தனர். அந்த வழக்கே நேற்று நடைபெற்றது. (ம-26)

## நாடாளுமன்றத்திலும்...

மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்தே மொழிபெயர்ப்புத் தவறு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை தாங்கள் (சபாநாயகர்) சபைக்கு அறிவிக்கும் போது உங்களின் வேகத்துக்கு அமைய தமிழ்மொழியில் சரியாக மொழிபெயர்க்கப்படவில்லை. எனவே, தீர்ப்பின் தமிழ்வடிவத்தை சமர்ப்பிக்குமாறு வலியுறுத்துகிறேன் என்றார்.

இதன்போது, சபைக்குத் தலைமைத் தாங்கிய சபாநாயகர், 'உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் ஆங்கில மொழியிலேயே கிடைக்கப் பெறும். அதை மொழிபெயர்க்க முடியாது' என்றார்.

மீண்டும் எழுந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், 'சபாநாயகர், சபைக்கு அறிவித்த தீர்ப்பின் உள்ளடக்கத்தை, மொழிபெயர்த்தவர் தமிழ்மொழியில் முறையாக மொழிபெயர்க்கவில்லை. தமிழ் மொழிபெயர்ப்பு சரியாக அமையவில்லை.

ஆகவே அதனை சரியாக மொழிபெயர்த்து தருமாறு கேட்கிறேன்' என்று மீண்டும் வலியுறுத்தினார்.

இதன்போது சபையில் இருந்த ஏனைய உறுப்பினர்கள் சபாநாயகரிடம் 'தமிழ்மொழி உரைபெயர்ப்பு முறையாக அமையவில்லை. ஆகவே தாங்கள் (சபாநாயகர்) விடுத்த நீதிமன்றத் தீர்ப்பின் அறிவிப்பின் மொழிபெயர்ப்பை தமிழ் மொழியில் தருமாறு கேட்கிறார்' என்று குறிப்பிட்டார்கள்.

இதையடுத்து, சபைக்குத் தலைமை தாங்கிய சபாநாயகர், 'தங்களுக்கு (சி. சிறீதரனை நோக்கி) சரியான மொழிப்பெயர்ப்பை வழங்குவதற்கு அறிவுறுத்துகிறேன்' -என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வு!

யாழ்ப்பாணம், பெப். 15

அச்சுவேலி மேற்கு, கலைமகள் சனசமூக நிலைய பாரம்பரிய விளையாட்டு நிகழ்வும் கல்விசார் பாராட்டு விழாவும் கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெறவுள்ளது. (ம-22)

# அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கை மீள அழைக்கவேண்டும் அமெரிக்கா

## வலியுறுத்துகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, பெப்.15

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். அவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவிப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பிரிவினை வாதத்துக்கு எதிரான கூட்டணியினர் கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இலங்கையின் இறையாண்மைக்கும்,சுயாட்சிக்கும் சவால் விடுக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். வியன்னா ஒப்பந்தத்தையும் மீறியுள்ளார்.

பாலினம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனம் பல மில்லியன் டொலரைச் செலவிட்டுள்ளது என்று அமெரிக்காவின் புதிய அரசாங்கம் குறிப்பிட்டுள் ளது. இலங்கையின் கலாசாரத்தை சீரழிப்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், நிதி பெற்றுக் கொண்டவர்களின் விவரங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம் - என்றார். (எ-இ)







# பரிசளிப்பு விழா


மன்னார் நகர்ப்பகுதியை மையப்படுத்தி இயங்கிவரும் சிறுவர்களுக்கான கல்வி நிறுவனமான 'மென்ஸ் கொலேஜ்' நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா மன்னார் நகரசபை மண்டபத்தில் மென்ஸ் காலேஜ் நிறுவனத்தின் முகாமையாளர் நஜீலா பானு முஹீத் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது. (ச-33,56)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, நுணாவில் கண்டி வீதியில் இருந்து 200m தூரத்தில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 224 7902**

# மரண அறிவித்தல்



## பூபாலசிங்கம் இராஜேஸ்வரி

யாழ். திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி இராஜவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் இராஜேஸ்வரி அவர்கள் கடந்த 12.02.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பூபாலசிங்கம் J.P அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், இராஜேந்திரன் மற்றும் மங்களேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணம், சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகேந்திரா (கொழும்பு), காலஞ்சென்ற ஸ்ரீகுமார் (கொழும்பு), சக்திகுமார் (பிரான்ஸ், லண்டன்), ஜெயந்தினி (லண்டன்), ஜெயந்திகுமார்(கனடா), சுகிர்தினி (லண்டன்), சுரேஸ்குமார் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், நடேசன் (லண்டன்), யசோதா (கொழும்பு), தக்ஷினி (கொழும்பு), சகுந்தலா (பரிஸ்), தசரதகுமார் (லண்டன்), இந்துமதி (கனடா), நளாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

லோகேந்திரா - மகன் - +94 777 413 569,
ஜெயந்திகுமார் - மகன் - +94 764 841 835, +164 724 80583,
சக்திகுமார் - மகன் - +33 611 36142,
சுரேஸ்குமார் - மகன் - +44 772 509 7706

தோற்றம் 22.01.1933 மறைவு 12.02.2025

இராஜ வீதி,
திருநெல்வேலி.

(CS/2529) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org